# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 99/2023

**வாதிகள் தரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அல்லிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

---

| | | |
|---|---|---|
| பெயர் | ஜெயபாண்டி வா.சா.-1 | சாதி |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுகா | | வயது |

---

முதல் விசாரணை 12-08-2024

நான் இந்த வழக்கின் 1 ம்வாதி வாதிகள் தரப்பு 1 வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

1 ம் வாதியின் ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.–1** ஆகும். 2 ம் வாதியின் ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.–2** ஆகும். 12-09-2013 ம் தேதியில் எனக்கு சிலுக்கம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–3** ஆகும். 18-03-2014 ம் தேதியில் நான் எனது சகோதரர் சக்கரைப்பாண்டிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–4** ஆகும். தாவாச் சொத்திற்குரிய புல வரைபடத்தின் இணையதள நகல் **வா.சா.ஆ.–5** ஆகும். 22-03-2018 ம் தேதியில் எனது தகப்பனார் எட்டப்பனுக்கு எழுதிக்கொடுத்த

இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–6** ஆகும். 22-03-2018 ம் தேதியில் 2 ம்வாதி சக்கரைப்பாண்டி, எனது தகப்பனார் எட்டப்பனுக்கு எழுதிக்கொடுத்த தான ஷெட்டில்மெண்ட் பத்திரத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–7** ஆகும்.

வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.